US – 534

# IV Semester B.A./B.Sc./B.Com. Examination, May/June 2007
## (Freshers Scheme)
## TAMIL LANGUAGE (Part – I) (Paper – IV)

Time : 3 Hours Max. Marks : 90

**I.** *அ. விரிவான விடை தருக* **15**

1. கண்ணன் மீது ஆண்டாள் கொண்ட காதல் பெருக்கினை அவர்தம் பாடல்கள் வழி நின்று விளக்குக.

*அல்லது*

திருவேங்கடமலையானிடம் குலசேகராழ்வார் வேண்டுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

2. திரிசடை கவிதைகளின் சிறப்பினை வரைக. **15**

*அல்லது*

மாலதி மைத்ரியின் கவிதைச் சிறப்பினை ஆராய்க.

*ஆ. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.* **5**

1. "கானக் களியானை தன் கொம் பிழந்து
கதுவாய் மதஞ் சோரத்தன் கையெடுத்து
கூனல் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும்
கோவர்த் தனமென்னும் கொற்றக் குடையே

*அல்லது*

"வடிவிணையில்லா மலர்மகள் மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை
கொடுவினையேனும் பிடிக்க நீ ஒருநாள்
கூவுதல் வருதல் செய்யாய்"

2. "என்றேனும் **5**
கதவு திறந்து வழி கிடைக்குமெனில்
அது பறந்துதான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும் கூட"

*அல்லது*

"'நானோ
எனது முகவரியை டைரியில் தேடியபடி"

*இ) எவையேனும் ஐந்திற்கு இலக்கணக் குறிப்பு வரைக* **5**

வெண்குடை, பிரமனும் இந்திரனும், கூவுதல், மலை மலை, பவளவாய் கருகரு, காலைமாலை

*ஈ) இலக்கியச் சிறப்பு வரைக* **5**

"செப்பாமடைய திருமா லவன் தன்
செந்தாடுரைக்கை விரல் ஐந்தினையும்

P.T.O.

www.onlinebu.com
www.onlinebu.com

கப்பாக மடுத்து மணி நெடுந்தோள்
காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை
எப்பாடும் பரந் திழி தெள்ளருவி
இலங்கு மணி முத்து வடம் பிறழ
குப்பாயமென நின்று காட்சி தரும்
கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையே"

*அல்லது*

தினமும் வழுக்கியும்
அருகே
திறந்த கதவு இருந்தும்
அடைத்த
கண்ணாடி ஜன்னலின்
கம்பியைக் குறிவைத்து
வழுக்கி வழுக்கித் தோற்கும்
கண்ணாடியை
உடைக்கவும் முடியாமல்
திறக்கவும் தெரியாமல்
ஒரு
வாலாட்டிக் குருவி
வழுக்கி
வழுக்கி தோற்கும்"

**II.** ***ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக*** 15

1. கோவலன் பயணம்
2. மாடலன்மறையோன் பயணம்
3. சேரன் செங்குட்டுவன் பயணம்

**III.** ***ஏதேனும் ஒரு சிறுகதையைத் திறனாய்வு செய்க.*** 15

1. அசைக்க முடியாது
2. சனிக்கிழமை
3. ஒரு ஏழைப் பெண்ணின் வாள்

**IV.** ***கடிதம் வரைக*** 10

நீவிர் வசிக்கும் பகுதியில் தெருவிளக்கு வசதி செய்து தருமாறு வேண்டி மாநகராட்சி ஆணையாளருக்கு ஒரு கடிதம் வரைக.

---

www.onlinebu.com

www.onlinebu.com